
Q

பெருநாள் தொழுகை முறை

உமர் ஷரீஃப் இப்னு அப்துஸ் ஸலாம்



DARUL HUDA

www.darulhuda.net

பெருநாள் தொழுகையின் முறை, மற்றும் அதில் ஓதவேண்டியவை

பெருநாள் தொழுகை இரண்டு ரக்அத்துகளாகும். குத்பாவிற்கு முன்னர் அந்த தொழுகை நிறைவேற்றப்பட வேண்டும்.

عَنْ عُمَرَ ﷺ قَالَ صَلَاةُ السَّفَرِ رَكْعَتَانِ وَصَلَاةُ الْجُمُعَةِ رَكْعَتَانِ وَالْفِطْرُ وَالْأَضْحَى رَكْعَتَانِ تَمَامٌ غَيْرُ قَصْرٍ عَلَى لِسَانِ مُحَمَّدٍ ﷺ

பயணத் தொழுகை இரண்டு ரக்அத்துகளாகும். ஜுமுஆத் தொழுகை இரண்டு ரக்அத்துகளாகும். ஈதுல் ஃபித்ர் தொழுகையும் ஈதுல் அழ்ஹா தொழுகையும் இரண்டு ரக்அத்துகளாகும். இது நபி முஹம்மது ﷺ அவர்களுடைய நாவின் வாயிலாக கடமையான குறைவற்ற முழுமையான எண்ணிக்கையாகும்.[1]

தொழுகையின் முறை

முதலில் தொழுகையை ஆரம்பிப்பதற்கு 'தக்பீரத்துல் தஹ்ரீம்'ஐ கூற வேண்டும். பிறகு துஆவுல் இஸ்திஃப்தாஹ் - தொழுகையின் தொடக்க துஆவை ஓதவேண்டும். பிறகு, ஆறு தக்பீர்கள் கூற வேண்டும். பிறகு அவூது, பிஸ்மி கூறி ஃபாத்திஹா மற்றும் சூரா ஓதவேண்டும்.[2]

---

1. அறிவிப்பாளர்; உமர் ﷺ, நூல்: சுனன் இப்னு மாஜா, எண்: 1053
2. சில அறிஞர்கள் தக்பீரதுல் தஹ்ரீமை சேர்க்காமல் ஏழு தக்பீர்கள் கூறவேண்டும் என்று கூறுகிறார்கள்.

இரண்டாவது ரக்அத்திற்கு எழுந்தவுடன் குர்ஆன் ஓத ஆரம்பிப்பதற்கு முன்பாக எழுவதற்காக கூறப்பட்ட தக்பீர் அல்லாமல் ஐந்து தக்பீர் கூறவேண்டும்.

عَنْ عَائِشَةَ ﵂ أَنَّ رَسُولَ اللهِ ﷺ كَانَ يُكَبِّرُ فِي الْفِطْرِ وَالْأَضْحَى فِي الْأُولَى سَبْعَ تَكْبِيرَاتٍ وَفِي الثَّانِيَةِ خَمْسًا رواه أبو داود برقم ٩٧٠

ரஸூலுல்லாஹ் ﷺ அவர்கள் நோன்புப் பெருநாள் மற்றும் ஹஜ்ஜுப் பெருநாள் தொழுகையில் முதல் ரக்அத்தில் ஏழு தக்பீர்களும் இரண்டாவது ரக்அத்தில் ஐந்து தக்பீர்களும் கூறுவார்கள்.[3]

இவ்வாறு தக்பீர் கூறும்போது ஒவ்வொரு முறையும் கைகளை உயர்த்த வேண்டும்.*

عَنْ وَائِلِ بْنِ حُجْرٍ ﵁ الْحَضْرَمِيِّ قَالَ رَأَيْتُ رَسُولَ اللهِ ﷺ يَرْفَعُ يَدَيْهِ مَعَ التَّكْبِيرِ رواه أحمد برقم ١٨٠٩٣

வாயில் இப்னு ஹுஜ்ர் ﵁ கூறுகிறார்கள்: ரஸூலுல்லாஹ் ﷺ அவர்கள் தக்பீர் கூறும்போது தமது இரு கைகளையும் உயர்த்துவதை நான் பார்த்தேன்.[4]

தக்பீர்களை கூறிய பின்னர், அவூது, பிஸ்மி கூற வேண்டும். பிறகு, சப்தமாக ஓத வேண்டும். முதல் ரக்அத்தில் ஃபாத்திஹா சூராவையும் ஸப்பிஹிஸ்ம ரப்பிகல் அஃலா என்ற சூராவையும் இரண்டாவது ரக்அத்தில் ஃபாத்திஹாவிற்கு பின்னர் ஹல் அதாக்க ஹதீஸுல் காஷியா என்ற சூராவையும் ஓத வேண்டும்.

عَنِ النُّعْمَانِ بْنِ بَشِيرٍ ﵁ أَنَّ رَسُولَ اللهِ ﷺ كَانَ يَقْرَأُ فِي الْعِيدَيْنِ بِسَبِّحِ اسْمَ رَبِّكَ الْأَعْلَى وَ هَلْ أَتَاكَ حَدِيثُ الْغَاشِيَةِ رواه ابن ماجة برقم ١٢٧١

---

3. அறிவிப்பாளர்: ஆயிஷா, நூல்: அபூ தாவூத், எண்: 970

4. நூல்: அஹ்மது, எண்: 18093

ரஸூலுல்லாஹ் ﷺ அவர்கள் இரு பெருநாள் தொழுகையிலும் “ஸப்பிஹிஸ்ம ரப்பிகல் அஃலா” என்ற சூராவையும் ஹல் அதாக்க ஹதீஸுல் காஷியா என்ற சூராவையும் ஓதுவார்கள்.[5]

அல்லது முதல் ரக்அத்தில் காஃப் வல்குர்ஆனில் மஜீத் என்ற சூராவையும் இரண்டாவது ரக்அத்தில் இக்தரபத்திஸ் ஸாஅத்து என்ற (அல்கமர்) சூராவையும் ஓத வேண்டும்.

عَنْ أَبِي وَاقِدٍ اللَّيْثِيِّ ﵁ قَال سَأَلَنِي عُمَرُ بْنُ الْخَطَّابِ عَمَّا قَرَأَ بِهِ رَسُولُ اللهِ ﷺ فِي يَوْمِ الْعِيدِ فَقُلْتُ بِاقْتَرَبَتِ السَّاعَةُ وَ ق وَالْقُرْآنِ الْمَجِيد رواه مسلم برقم ٨٩١

அபூ வாகித் அல்லைஸி ﵁ கூறுகிறார்: ரஸூலுல்லாஹ் ﷺ அவர்கள் பெருநாளில் (-பெருநாள் தொழுகையில்) என்ன ஓதினார்கள் என்று என்னிடம் உமர் இப்னுல் கத்தாப் ﵁ கேட்டார்கள். (முதல் ரக்அத்தில் ஃபாத்திஹா சூராவிற்கு பின்னர்) இக்தரபத்திஸ் ஸாஅத்து என்ற சூராவையும் (இரண்டாவது ரக்அத்தில் ஃபாத்திஹா சூராவிற்கு பின்னர்) காஃப் வல்குர்ஆனில் மஜீத் என்ற சூராவையும் ஓதினார்கள் என்று கூறினேன்.[6]

ஆகவே, சில சமயங்களில் இந்த ஹதீஸின்படியும் சில சமயங்களில் இதற்கு முன்சென்ற ஹதீஸின் படியும் அமல் செய்வது நல்லதாகும். இரண்டு ஹதீஸையும் அமல்படுத்திய நன்மை கிடைக்கும். மேலும், தொழுகையாளிகளின் நிலையையும் கருத்தில் கொண்டு அதற்கேற்ப எது அவர்களுக்கு இலகுவாக இருக்குமோ அதற்கேற்ப சூராக்களை தேர்ந்தெடுத்துக்கொள்ளலாம்.

----

5. அறிவிப்பாளர்: நுஃமான் இப்னு பஷீர், நூல்: இப்னு மாஜா, எண்: 1271
6. நூல்: முஸ்லிம், எண்: 891